பதிவு எண் : M. 6311 ★ தோலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்டி

மலர் : 16] சென்னை : கார்த்திகை 3 (18—11—68) திங்கள் ★ பெங்களூர் : கார்த்திகை 4 (19—11—68) செவ்வாய் [இதழ் : 127

இந்தி மொழிக்கு வடக்கேயும் எதிர்ப்பு

பெங்களூர், நவ. 14—

அரியரசனத்தில் ஏற்றிவிடப்பட்டுள்ள இந்தியை, தென் மாநிலங்கள்தான் விரட்டிக்கொண்டிருக்கின்றன என்பதில்லை; வடக்கேயும் அதற்கு 'வரவேற்பு' ஒரு மாதிரியாகத்தான் இருப்பதாகத் தெரிகிறது!

ஒரிசா அரசு நடத்தும் பாரா பத்திரி லாட்டரிக்கு இந்திப் பகுதியில் உள்ள ஒருவர் பணம் அனுப்பியிருக்கிறார். மணியார்டர் பாரத்

(4-ம் பக்கம் பார்க்க)

சுகபோகங்களை அனுபவிக்க அல்ல பதவி!

மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பாகவே கருதுகிறோம்

சென்னை, நவ. 18—

"பெருந்தன்மைப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாங்கள்; எங்களுக்குக் கிடைத்த மேயர் மதுவையோ, அமைச்சர் பதவியையோ பெரிதென நம்பி, 'நம்மைவிட யாரும் உயர்ந்தவரல்லர்' என்று கருதினால், எங்களைப்போல் ஏமாளிகள்--சோணகிரிகள் உலகில் இல்லை!

"அமைச்சர் பதவியும், மேயர் பதவியும் பொதுப் பணியாற்ற எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு--பொதுமக்கள் இட்ட உத்தரவு! காலால் அவர்கள் இட்ட உத்தரவை தலையால் செய்து முடிக்க வேண்டியவர்கள் நாங்கள்!

"இந்தப் பதவி கிடைத்தது; இதை வைத்துச் சுய இலாபவேட்டையாடி சுகபோகங்களை, இருக்கும்வரை அனுபவிப்போம்' என்று நினைப்பவர்கள் அல்லர் நாங்கள்! ஏனெனில், நாங்கள் அப்படிப்பட்ட எளிமையின் தலைவரால் வளர்க்கப்பட்ட எளிமையின் தொண்டர்கள்! எங்கள் அண்ணனின் அரவணப்பில் வளர்ந்த தம்பிகள் நாங்கள்!

"அந்த அண்ணன் எப்படிப்பட்டவர்--எவ்வளவு எளிமை உள்ளம் படைத்தவர் என்பதை, ஏடுகளில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அமெரிக்காவில் அவர் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டிருந்தபோது அவருக்குச் சிகிச்சையளித்த டாக்டர் மில்லர், 'அண்ணா அவர்கள் தாய்நாடு திரும்பினாலுமு முழு ஓய்வு எடுக்க வேண்டும்; விசாலமான பெரிய வீட்டில் இருக்க வேண்டும்; உலவிடத் தோட்டமுள்ள இடமாக இருக்க வேண்டும்; குளிரி சாதனமுள்ள அறையில் இருக்க வேண்டும்' என்று அறிவித்த கருத்தை, அண்ணாவுடனிருந்த இரா. செழியனும், க. இராசாராமும் எங்களுக்குத் தெரிவித்தனர்; இருபது நாட்களுக்குள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தோம்.

"அண்ணா அவர்கள் அந்த வீட்டைப் பார்த்தார்; நாற்காலியில் உட்கார்ந்து பார்த்தார்; சோபாவில் அமர்ந்து பார்த்தார்; இந்தச் சோபாவைவிட, ஏழையின் நெஞ்சில் எனக்காகப் போடப்பட்டிருக்கும் சோபா உயர்ந்தது; இந்த விசாலமான கட்டிடத்தை விட ஏழையின் குறைவான குடிசையில் எனக்காகத் தரப்பட்டிருக்கும் இடம் பெரியது; ஏழைகளாகவே பிறந்தோம்; ஏழைகளுக்காகவே உழைத்தோம்; ஏழைகளின் நன்மைக்காகவே பதவி பெற்றோம்; அந்தகைய எளிமையை ஆதாரமாகக் கொண்ட நமக்கு இத்தனை வசதிகளா -- இத்தனை ஆடம்பரம் மிக்க வசதியா? என்ற எளிமையின் உணர்வு பீறிட்டெழுந்தால், அண்ணா அவர்கள், 'இந்த வீடு எனக்கு வேண்டாம்' என்று அறிவித்துவிட்டார்!

சுகபோகங்களைக் கருதி பதவிக்கு வந்தவர்கள் அல்லர் நாங்கள் என்பதையே இந்த நிகழ்ச்சி எடுத்துரைக்கும்!

"ஏழை மக்களுக்காகவே உழைக்கிறோம்; எங்கள் உழைப்பில் குறை கண்டால், திருப்பி அழைத்துக்கொள்ளுங்கள்; காங்கிரசாரைப்போல் விரட்டிவிடாதீர்கள்! 'இதுவரையில் தோட்டையிலும், மாநகராட்சியிலும் இருந்தாய்; இப்போது இங்கு இரு; பொதுப்பணி ஆற்று; உன்னைத் திருத்திக்கொள்' என்று கூறுங்கள்! ஏனென்றால், தி. மு. கழகம் நீங்கள் பெற்ற குழந்தை--நிலவர்த்த குழந்தைகள்--உங்கள் கட்டளைகள் நிறைவேற்றும் உங்கள் வீட்டுத் தலைமகன்! ஆகவே, அந்தக் கழகத்திற்குப் பேராதரவு தரவேண்டியது உங்கள் கடமை!"

---அமைச்சர் கருணாநிதி

—மேயர்: துணை மேயர் பாராட்டுக் கூட்டத்தில்

மாணவர் தி. மு. க.

மாநிலமெங்கும் அமைப்புகள் ஏற்படும்

மு. கருணாநிதி --என். வி. நடராசன் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் முடிவு

சென்னை, நவ. 18

நேற்று காலை 11-மணிக்கு 'அன்பக'த்தில் சென்னைக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகளின் கூட்டம் கழக பொருளாளர் மு. கருணாநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அனைத்துக் கல்லூரிகளையும் சார்ந்த மாணவப் பிரதிநிதிகள், காலை 11-மணிமுதல் பிற்பகல் 3-மணிவரையில் தொடர்ந்து விவாதித்து, தென்னகமெங்கும் மாணவர் தி. மு. க. அமைப்பினை உருவாக்குவதற்கான யோசனைகளை எடுத்துரைத்தனர்.

இறுதியாக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், மு. கருணாநிதி அவர்களும் உரையாற்றினர்.

மாணவர் அமைப்பினை ஒழுங்குபடுத்துவதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய அரிய கருத்துக்களை, தலைவர்கள் மாணவர்களுக்கு விளக்கினர்.

ஒவ்வொரு கல்லூரியிலும் — பள்ளியிலும் மாணவர் கழகங்கள் தனித் தனியாக இருப்பதற்குப் பதிலாக ஊருக்கு ஒரு மாணவர் தி. மு. க. அமைக்கப்பட்டு, அவைகட்குத் தலைமையாக சென்னையில் மாணவர் தி. மு. க. தலைமை நிலையம் அமைய வேண்டும் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டு, அதைச் செயல்படுத்தக் கீழ்க்காணும் முடிவு எடுக்கப்பட்டது.

சென்னையில் மாணவர் தி.மு.க. அமைவதற்கும், மாநிலமெங்கும் மாணவர் தி. மு. க. கிளைகளை உருவாக்குவதற்கும் தி. மா. மு. க. பொதுச்செயலாளர் திரு. எஸ் டி. சோமசுந்தரம் எம் பி அவர்களுக்கு அறிவித்து மேற்கொண்டு ஆற்ற வேண்டிய பணிகளுக்காக—தற்காலிகமாகத் தோழர் இராதாமுகம்மது (சட்டக் கல்லூரி) அவர்களை அமைப்பாளராகக் கொண்ட கீழ்க்காணும் குழு அமைக்கப்பட்டது:—

1. துரைமுருகன் (சட்டக் கல்லூரி)
2. ப. காளிமுத்து (மாநிலக் கல்லூரி)
3. ந. இராமலிங்கம் (பச்சையப்பன் கல்லூரி)
4. எம். ஜி. அண்ணாத்துரை (தோல தொழில் நுட்பக் கல்லூரி)
5. கே. பத்மநாபன் (கால்நடை மருத்துவக் கல்லூரி)
6. கெய்சர் சாகுல் அமீது (புதுக் கல்லூரி)
7. கணேசமூர்த்தி (தியாகராயர் கல்லூரி)
8. ஆண்டியப்பன் (அரசினர் கலைக் கல்லூரி)
9. நி. அறிவுமணி (பொறியியல் கல்லூரி)

அமைப்புக் குழுவின் முதற்கூட்டம்

17-11-68 மாலை 4-30 மணிக்கு 'அன்பக'த்தில் அமைப்பாளர் இராசா முகமது முன்னிலையில் பதின்மர் கொண்ட தற்காலிகக் குழு கூடியது.

மற்ற மாவட்டங்களிலுள்ள மாணவப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கும் ஏற்கனவேயுள்ள மாணவர்கள் அமைப்புக்களைப் புதுப்பிப்பதற்கும் மாவட்டவாரியாக கீழ்க்காணும் மாணவத் தோழர்களை அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டது:—

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்கள்

பாண்டியன் (சட்டக் கல்லூரி); அரிகிருஷ்ணன் (மாநிலக் கல்லூரி); கெய்சர், சாகுல் அமீது (புதுக் கல்லூரி); இராமச் சந்திரன் (சட்டக் கல்லூரி); துரை பாண்டியன் (பச்சையப்பன் கல்லூரி); உடையப்பன் (சட்டக் கல்லூரி); ஜின்னா (சட்டக் கல்லூரி).

வட ஆற்காடு, கோவை, நீலகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டங்கள்

துரை முருகன் (சட்டக் கல்லூரி); பத்மனாபன் (கால்நடை மருத்துவக் கல்லூரி); எம்.ஜி. அண்ணாதுரை (தோல் தொழில் நுட்பக் கல்லூரி).

தென் ஆற்காடு மாவட்டம்

தட்சிணாமூர்த்தி (சட்டக்கல்லூரி); அரங்கசாமி (பச்சையப்பன் கல்லூரி); வேங்கடபதி (சட்டக் கல்லூரி).

தஞ்சை மாவட்டம்

இராமநாதன் (சட்டக் கல்லூரி); இராமலிங்கம் (பச்சையப்பன் கல்லூரி).

திருச்சி மாவட்டம்

ஆண்டியப்பன் (கலைக் கல்லூரி); கணேசமூர்த்தி (தியாகராயர் கல்லூரி); இரா. நல்லியண்ணன் (சட்டக் கல்லூரி).

மதுரை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்கள்

இராசா முகமது (சட்டக் கல்லூரி); காளிமுத்து (மாநிலக் கல்லூரி); ஜீவா கிருமணி (சட்டக் கல்லூரி); சோமசுந்தரம் (சட்டக் கல்லூரி); ரகுமான் கான் (சட்டக் கல்லூரி).

அண்ணா ஒப்புதல்

இந்த முடிவுக்கு கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களுடைய ஒப்புதலும் பெறப்பட்டது.

இந்திரா காந்திக்கு அண்ணா வாழ்த்து

சென்னை, நவ. 18—

இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியின் பிறந்த நாளையொட்டித் தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் வாழ்த்துக்களைத் தந்தி மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

கலப்பு மணத் தம்பதிகட்குத் தங்கப் பதக்கம்

கோவையில் அமைச்சர் கோவிந்தசாமி வழங்கினார்

கோயமுத்தூர், நவ. 18—

கோவை மாவட்டத்தில் கலப்பு மணம் செய்துகொண்ட ஏழு தம்பதிகட்குத் தங்கப் பதக்கங்களை விவசாயத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், நேற்று வழங்கினார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விவசாயக் கருவிகள்

ரூ 26,000 மதிப்புள்ள விவசாயக் கருவிகள், நுகையல் இயந்திரங்கள், மற்றும் பல சாதனங்களை 155 பேருக்கு அமைச்சர் வழங்கினார். அவர்களில் பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாவர்.

கலெக்டர் பாங்கோ தலைமை வகித்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

கண்டவை--கேட்டவை--உணர்ந்தவை!

தமிழக அரசின் செய்தித் துறையினர் ஏற்பாடுசெய்த பத்திரிகையாளர் சுற்றுலாக் குழு, கடந்த 8-ம் நாள் முதல் 14-ம் நாள் வரை வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பயணம் செய்தது.

அதனையொட்டி 'நம் நாடு' இதழின் சார்பாகச் சென்ற தோழர் எஸ். ஆர். எழுதும் கட்டுரைத் தொடர் நாளைமுதல் துவங்குகிறது.

கழுகுமலைக்குக் கிடைத்தது பரிசு!

திட்டப் பணிகளில் சிறந்த கிராமம்

நெல்லை மாவட்டத்திலுள்ள கழுகுமலை கிராமம், திட்டப்பணிகளில் சிறந்து விளங்கும் கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

தொழில், வேளாண்மை, கால்நடை, நீர்ப்பாசனம், உர உபயோகம் போன்ற 19 விதமான பணிகளை முன்வைத்து இந்தச் சோதனை நடத்தப்பட்டதாக கிராம நலத் திட்ட இயக்குநர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவிலுக்குத் தென்மேற்கே 19 கிலோ மீட்டர் தொலைவில் கழுகுமலை உள்ளது.

இச்சிற்றூரின் மக்கள் தொகை 7,408 ஆகும்; 2889 ஏக்கர் பரப்புள்ள இவ்வூர் கால்நடைச் சந்தைக்கும் தீப்பெட்டித் தொழிலுக்கும் பெயர் பெற்று விளங்குகிறது.

கழுகுமலை சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கும் ஏற்ற இடமாகும்.

இங்குள்ள குகைக் கோயிலில் பண்டைத் தமிழ் எழுத்தான வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

1967-ல் திறமையாகச் செயல்பட்டதற்காக இங்குள்ள காவல் துறைக்குப் பரிசு கிடைத்தது.

அடுத்த ஆண்டு முதல் வட்டாரத்திற்கும், கிராம சேவகர்--சேவகி ஆகியவர்களுக்கும் இது போன்ற பரிசுகள் வழங்கப்படும் என்று தெரிகிறது.

எச்சிலைத் தொட்டு டிக்கெட் கிழிக்கும் கெட்ட பழக்கம்

தவிர்க்க பஸ் கண்டக்டர்கட்கு புதிய சாதனம்

சென்னை, நவ. 16—

பஸ் கண்டக்டர்கள் விரல் எச்சிலில் நனைத்துக்கொண்டு டிக்கட் கிழிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்காக அரசுப் போக்குவரத்துத் துறை விரைவில் நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது.

டிக்கெட்டுகளைக் கிழிக்காமலேயே எடுத்துத் தருவதற்கு வசதியாக, டிக்கெட்டுகளை வைத்துக் கொள்வதற்கான புதிய சாதனமொன்றை பரிட்சார்த்தமாக சில கண்டக்டர்களுக்குக் கொடுத்துப் பார்க்கலாமென்று அதிகாரிகள் கருதுவதாகத் தெரிகிறது.

இம்மாதிரியான சாதனம் பம்பாயில் பயன்பாட்டில் இருக்கிறதாம்.

இரஷ்யாவின் சாதனை!

சந்திரனுக்கு மனிதனை அனுப்பிவைக்கக்கூடும்

மேற்கு ஜெர்மனி, நவ. 18—

விண்வெளி வீரர்களின்றி சக்திதரன் வலம்வந்த இரஷ்யாவின் 'ஜோண்ட்-5' என்ற விண்வெளிக் கப்பலிலிருந்து ரேடியோ சமிக்ஞைகள் வருவது நின்றுவிட்டதால், அது, பூமியில் இறங்கிவிட்டிருக்குமெனக் கருதப்படுகிறது.

திகைப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு சாதனையை இரஷ்யா ஏற்படுத்தியிருக்கிறது; அடுத்துப் ஆட்களுடன்கூடிய விண்வெளிக் கப்பலை, சந்திர மண்டலத்திற்கு இரஷ்யா அனுப்பக்கூடும்; டிச. 2-க் தேதிக்கும் — 12-ந் தேதிக்கும் இடையே இந்த முயற்சியை இரஷ்யா மேற்கொள்ளும்.

'உடனடியாகச் செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும்'

'மாணவர்கள் திறன் பெற்று விளங்குவது அவசியம்'

கல்வி நிபுணர்களுக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, நவ. 18—

"பொதுவாகக் கல்லியின் தரம் குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறதே தவிர, எந்த வகையில் கல்வித் தரம் குறைந்துவிட்டது என்பதை யாரும் சொல்லவில்லை.

"கல்வித் தரம் எதுவும் குறையவில்லை; ஆங்கில மொழியறிவு — ஆங்கிலத்தில் பேசுவது, எழுதுவது ஆகிய அம்சங்களில் தரம் குறைந்திருக்கிறது; பொது அறிவில் — விஞ்ஞான அறிவில் -- நமது மாணவர்கள், பழைய தலைமுறையினரைவிட வளர்ந்துதான் உள்ளனர்; ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த ஆசிரியர்கள், அரசுக்கு ஆலோசனை கூற வேண்டும்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

தென்னிந்திய ஆசிரியர்கள் சங்க ஆராய்ச்சிக் கவுன்சில் 10-ம் வகுப்பு மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் தயாரித்து, மைய நூல் நிலையங்கள்மூலம் விநியோகிக்கும் திட்டத்தை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் அமைச்சர் துவக்கிவைத்துப் பேசுகையில் விளக்கியதாவது :—

"80 மார்க்குகள் கிடைக்கும் என எதிர்பார்த்துப் பதில்களை எழுதும் மாணவன், ஆங்கிலத்தில் தனது கருத்தை எழுத முடியாத காரணத்தால் -- தனது உள்ளத்தில் 80 மார்க்குகளுக்குத் தயாரித்திருந்தாலும் -- விடைத்தாளில் 20 மார்க்குகள்தான் கிடைக்கும் அளவிற்கு எழுதுகிறான்.

இந்த மொழி அறிவுக் குறைபாட்டைப் போக்க, பாடத் திட்டத்தில் என்னென்ன மாற்றங்கள் செய்யவேண்டும் என்பதை அனுபவம்மிக்க ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள் அரசுக்கு ஆலோசனைகளாகத் தெரிவிக்க வேண்டும்.

இன்னும் சோதனைக் கட்டத்திலேயே இருந்துகொண்டிராமல், பல்வேறு நாடுகள் பெற்ற படிப்பினையை அடிப்படையாக வைத்து, உடனடியாகச் செயல் திட்டங்களை உருவாக்கவேண்டும்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்து வெளியேறும்போது அல்லது பி.யு.சி. படித்து முடித்தவுடன், ஒவ்வொரு மாணவரும் ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்றாகப் பேச -- எழுதக் கற்றுக்கொள்ளும் அளவில், திறன்பெற்று வெளிவரவேண்டும்.

கல்லூரி மட்டத்தில் மொழிகளைப் படிக்கக்கூடாது; எடுத்து எடுப்பிலேயே பாடத்தைத்தான் படிக்க வேண்டும். இந்த வகையில், மூன்றும் வகுப்பிலிருந்தோ ஐந்தாம் வகுப்பிலிருந்தோ ஆங்கிலப் பாடத் திட்டத்தை எந்த வகையில் மாற்றியமைக்க வேண்டும் என்பது குறித்து நிபுணர்கள் ஆலோசனை கூறவேண்டும்."

"பள்ளிக்கூட நாட்களை அதிகரிப்பது குறித்தும் யோசிக்கலாம்; ஒரு நாள் விடுமுறையைக்கூட குறைக்கலாம்" என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

மா. முத்துசாமி

"தேசியஒற்றுமையும், அனைத்து நாட்டு நல்லுறவும்" என்ற தலைப்பில், மாணவர்களுக்கான நூல்களை தயாரிக்கும் செயலத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துச்சாமி துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

நாடு சுதந்திரமடைந்து 20 ஆண்டுகள் ஆகியும்கூட, இன்றும் நாம் 'ஒற்றுமையாக இருக்க வேண்டும்' என்று கேட்டுக் கொள்ளும்படியான நிலையிம் இருக்கிறோம்.

இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த ஸல்லாப் பிரிவு மக்களும் ஒற்றுமையாக இருந்து உலகத் துக்கே வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

இன்னுர் உள்ளங்களில் இந்த உணர்வை ஆசிரியர்கள் புகுத்துவதன்மூலம் இந்த இலட்சியத்தை அடையலாம்.

மணிக்கு 150 மைல் வேகம்செல்லும்இரயில்

ஏரிவாடி உருளை பொருத்தப்பட்ட புரட்சிகரமான இரயில் வண்டி பிரிட்டனில் தயாராகிறது. பயண நேரத்தை ஏறக்குறைய பாதியாகக் குறைக்கும் இவ்வண்டிகளின் வேகம் மணிக்கு 150 மைல்களாகும்.

விமான மாதிரியில் தயாரிக்கப்படும் இந்த இரயில் வண்டியின் வேகமும், வளைவு இடங்களில் செல்லும்போது பாதுகாப்புத் தன்மையும் 'ஸல்கப்ரானிக்' கருவிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வேகம் கூடினுலும், முற்றிலும் குளிர்பதன வசதி உள்ள இந்த புதுவகை இரயில் வண்டிகள் தற்போதைய தண்டவாளங்களிலேயே ஓடும்; 'சிக்னல்' அனுப்பும் கருவிகளில் மட்டும் சில சிறு மாறுதல்கள் தேவைப்படும்.

இந்த 'ஜெட்' இரயில், சொருகுப் பயணத்திற்கும் -- விரைவுப் பயணத்திற்கும் ஏற்ற நவீன இரயிலாகும். தற்போதைய இரயில்களில் இந்த அளவு சொருகும், வேகமும் உள்ள வண்டிகளே கிடையாது.

பிரிட்டனில் மணிக்கு 110 மைல்கள் வேகம் செல்லக்கூடிய மின்சார வண்டிகள் ஏற்கனவே புழக்கத்தில் இருந்துவருகின்றன.

ம. பி. மாநிலத்தில் மாபெரும் அலுமினியத் தொழிற்சாலை

சோவியத் நிறுவனத்துடன் அரசு நிறுவனத்தின் ஒப்பந்தம்

புதுடில்லி, நவ. 18—

கோர்பாவில் அலுமினியத்தை உருக்கி வார்த்தல், அலுமினியத் தகடுகளைத் தயாரித்தல் இவற்றுக்கான ஆலையின் விரிவான திட்டத்தைத் தயாரிக்கும் ஒப்பந்தத் நிறுமொன்று இந்திய அரசாங்க நிறுவனமான பாரத் அலுமினியம் கம்பெனி லிமிடேட்டுக்கும்—'தயார்ப்புரோம் எண்டேர்ப்ரைட்' என்ற சோவியத் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தாயிற்று.

மத்தியப் பிரதேசத்திலுள்ள கோர்பாவில் மாபெரும் அலுமினியம் ஆலை ஒன்று நிறுவப்படும். 2 இலட்சம் டன் உற்பத்தி ஆற்றலுடன் உற்பத்தி ஆற்றலுடன் கூடிய இவ்வாலை அங்கேரியின் தொழில் நுட்ப வல்லுநரின் உதவியுடன் இப்பொழுது கட்டப்படுகிறது.

1 இலட்சம் டன் உற்பத்தி ஆற்றலுடன் கூடிய உருக்கி வார்க்கும் ஆலை, 50 ஆயிரம் டன் உற்பத்தி ஆற்றலுடன் கூடிய அலுமினியம் 'ஷீடர்சுரல்' ஆலை இவற்றைக் கட்டுவதற்கான தொழில் நுட்ப உதவி -- நிதி உதவி ஆகியவற்றை வழங்கச் சோவியத் அரசு முன்வந்துள்ளது.

1 இலட்சம் டன் அலுமினிய உலோகம், 50 ஆயிரம் டன் முழுவதுமாக வார்க்கப்படாத பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியானது, இந்தியாவின் அலுமினியத் தேவையை நிறைவு செய்யதில் பெருமளவு உதவும். வெளி நாடுகளிலிருந்து அலுமினியத்தை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையை அந்த அளவுக்கு நீக்கி விடும்.

அமெரிக்கத் தலைவர் பதவியேற்பு விழா

ரூ. 1.50 கோடி செலவிடப்படும்

ஏற்பாடுகளுக்கான பணிகளில் 5,000 அதிகாரிகள் ஈடுபாடு

வாஷிங்டன், நவ. 18—

அமெரிக்காவின் 37-வது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரிச்சர்டு நிக்சன் (குடியரசுக் கட்சி) எனவரி 20-ம் நாள் பதவியேற்பார்.

இந்தப் பதவியேற்பு விழாவுக்கு ரூ. 1,50,00,000 செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பதவியேற்பு விழா ஏற்பாடுகளுக்கு செய்யும் பணியில் ஏறத்தாழ 3,000 அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

பதவியேற்ற விழாச் செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ளுமாறு அமெரிக்க மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

காந்தியார் நூற்றாண்டு விழா

தூக்குத் தண்டனைகள் ஆயுள் தண்டயாகக் குறையும்

புதுடில்லி, நவ. 18—

இந்த நவம்பர் 12-ம் நாள்வரையில் நாடெங்கும் நீதிமன்றங்களில் விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனைகள் அனைத்தையும் ஆயுள் தண்டனையாகக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் குறைத்து விடுவார் எனத் தெரிகிறது.

காந்திஜி நூற்றாண்டு விழாவை யொட்டி இந்தத் தனிச் சலுகை குறித்து மத்திய அமைச்சரவை பரிசீலனை செய்து குடியரசுத் தலைவருக்குச் சிபாரிசு செய்தது.

சென்னையில் 132-வது அஞ்சலகம்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் திறந்துவைத்தார்

தூய தமிழில் பெயர்ப் பலகை அமைத்ததற்குப் பாராட்டு

சென்னை, நவ. 18—

வட சென்னை காக்கரன் பிரிட்ஜ் சாலையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அரிசிராயணபுரம் அஞ்சல் நிலையத்தை, தமிழக உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் திறந்துவைத்தார்.

அமைச்சர் தமது திறப்புரையில் தூய தமிழில் பெயர்ப் பலகை ஏற்றுப்பட்டிருந்ததைப் பாராட்டியதுடன், இவ்வட்டாரத்தின் நீண்டநாள் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் முயற்சி செய்து இந்த அஞ்சலகத்தை ஏற்படுத்திய தலைமை அஞ்சல் அதிகாரியையும் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரையும் பாராட்டினுர்.

அஞ்சல் துறைத் தலைமை அதிகாரி திரு. எச்.கே. ராவ் பேசுகையில் சென்னை நகரில் இதுவரையில் 131 அஞ்சல் நிலையங்கள் உள்ளதாகவும், இப்போது திறக்கப்பட்டது 132-வது அஞ்சல் நிலையம் என்றும் கூறினுர்.

மேலும் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலும், போர்ட் டிரஸ்ட் காலனியிலும் ஆக இரண்டு அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படவிருப்பதாகவும் அறிவித்தார்.

தமிழகம் முழுவதிலும் 8,000 அஞ்சல் நிலையங்கள் உள்ளதாகவும், இன்னும் ஒன்றரை ஆண்டுக் காலத்தில் மேற்கொண்டு 100 புதிய அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினரும் முன்னுள் மேயருமான ஜி. குசேலரும் பேசினுர்.

அஞ்சல் துறை இயக்குநர் திரு. தயானந்தா அனைவரையும் வரவேற்றுர். அஞ்சல் துறை ஞ்சுரிண்டெண்டு திரு. டி.எஸ். ஜேசுதாசன் நன்றி கூறினுர்.

ஒழுக்க நெறி காத்த முதல்வர் தமிழர்!

சென்னை, நவ. 16—

"இந்த 20-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தின் நாகரிகமென்று எதைச் சொல்கிறார்களோ அது, கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்திருக்கிறது; ஆனுல், ஒழுக்க நெறி பிறழாமல் காப்பாற்றப்பட்டு வந்தது.

"தமிழகத்தில் அறிவு வளர வளர, ஐரோப்பாக் கண்டம் இப்பொழுது எதை எதை நாகரிகமென்று கருதுகிறதோ-மதுக் குடிப்பதை எப்படி நாகரிகமென்று கருதுகிறதோ--- அதையெல்லாம் அநாகரிகமென்று கருதி அன்றையத் தமிழகம் ஒதுக்கியது!

"'குடிப்பது குற்றம் என்று முதன் முதலில் சொன்னவர் வள்ளுவர்தான்! வள்ளுவர் குறளைதான் மனித சமுதாயத்தின் சட்டம்!

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் கூறும் சட்ட விதிகளை மீறிச் செல்வதன் மனிதனுக மாட்டான்; தோற்றத்தால வேண்டுமானுல் அவனது வடிவு மனித வடிவாக இருக்கலாமே தவிர, மனித சமுதாயம் அவனை மனிதனென்று ஒப்புக்கொள்ளாது!

"மனித சமுதாய ஒழுக்கம் காப்பாற்றப்படுவது இராணுவ பலத்தால அல்ல -- தவறுக்கு வருந்தும் மனத்தால்தான் அதைக் காப்பாற்ற முடியும்!

"நாம் குடித்தால் நம் மகனும் குடிக்கச் செய்வான்; அவன் குடித்தால் அவனது மகனும் குடிப்பான்; இப்படியே குடிப் பழக்கம் வளர்ந்தால் சமுதாயம் சீர்கெட்டுவிடும்!

உண்மை—நேர்மை—ஒழுக்கம் என்பது ஏட்டளவிலிருக்கிறது தவிர, நாட்டு மக்கள் உள்ளத்து அளவில் இருக்கவில்லை! முன்னேர் செய்த தவறுகளை நாம் திருப்பச் செய்யக்கூடாது!"

--ம. பொ. சிவஞானம்

(தமிழகப் அரசின் நிறைப்படக் கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழாவில்)

இரண்டாம் போகத்துக்குத் தீர்வை விலக்கு

தென் --- வட ஆற்காடு மாவட்டங்களுக்கும் விரிவு

திருச்சி, நவ. 16— தஞ்சை மாவட்டத்தில் இரண்டாவது போக நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதைப்போல மாநிலத்தில் புது மாதிரி இரண்டாவதுபோக சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றப் பகுதிகளுக்கும் இவ்வாண்டு இந்தச் சலுகையை விரிவுபடுத்துவது என்று தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இரண்டாவது போகச் சாகுபடிச்சத்துக்குத் தண்ணீர் தீர்வை விலக்கு 1377 பசலி ஆண்டுக்கும் பொருந்தும். (1377 பசலி ஆண்டு என்பது 1968 ஜூலை 1-ந்தேதி முதல் ஓராண்டாகும்.)

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இந்தச் சலுகை தரப்படும்.

1376 பசலி ஆண்டுவரை ஒரு போகச் சாகுபடி நிலமாகவும், பின்னர் முதன்முறையாக இரண்டாவது போக உணவுப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட நிலமாகவும் இருக்கவேண்டும்.

இவ்வாண்டு, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் தாலூராவிலும்; கடலூர் வட்டம் பெருமாள் ஏரி ஆயக்கட்டிலும்; திருக்கோயிலூர் அணை ஆயக்கட்டிலும் வடார்க்காடு மாவட்டம் சாத்தனூர் அணைத் திட்ட ஆயக்கட்டிலும் புதிதாக இரண்டாவது போக சாகுபடி கொண்டுவரப்பட்டுள்ளது; அப்பகுதிகளில் தண்ணீர் தீர்வை விலக்கு உண்டு.

சிறு தொழில் கார்ப்பரேஷன் தொழிலாளர் மாநாடு

குடந்தையில் நடத்த ஏற்பாடு

குடந்தை, நவ. 15— தமிழக சிறுத்தொழில் கார்ப்பரேஷன் தொழிலாளர் சம்மேளனத்தின் 2-வது மாநில மாநாட்டை டிச. 14, 15-ம் நாட்களில் குடந்தை மூர்த்தி கலையரங்கில் சிறப்புற நடத்துவதென்றும், மாநாட்டிற்கு தமிழகத் தொழிலமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர், கோரத் தொழிலமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோரையும், மற்றும் தொழிலாளர் தலைவர்களையும், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர் உறுப்பினர்களையும் அழைப்பதெனறும் முடிவெடுக்கப்பட்டது.

சம்மேளனப் பொதுச்செயலாளர் வி. சௌரிமுத்து தலைமையில் 10—11—68-ல் குடந்தை பணிகள் விடுதியில் நடைபெற்ற மாநாட்டின் வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டது.

வரவேற்புக் குழுத் தலைவராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆர். இராமசாமி, செயலாளராக எஸ் ஆர். இராதா எம்.சி, தண்டீச் செயலாளர்களாக தஞ்சை திருநாவுக்கரசு, மன்னை கே. இராமலிங்கம், மாயூரம் சீதர், பொருளாளராக குடந்தை கோ. வெங்கடாசலம் ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக 21 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மறைவு

சென்னை 22-வது வட்ட தி.மு.க. செயலாளர் து. கோவிந்தசாமி— 24-வது வட்ட முன்னாள் நகரன்றாத உறுப்பினர் து. வேணுகோபாலை ஆக்கியோரின் அன்னை யாரர் 8—11-68-ல் இயற்கையெய்தியது குறித்து அன்னாரை பிரிந்து துயருறும் குடும்பத்தினருக்கு வட்டக்கிளை உறுப்பினர்கள் --- வட்டார மக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

அரிசி ஆலைத் தொழிலில் நவீன முறை

ஊழியர்களுக்குப் பயிற்சி வகுப்பு

நம் நாட்டில் அரிசி ஆலைத் தொழிலில் நவீன அம்சங்களைப் புகுத்த நாம் ஏற்றனவே முயற்சி மேற்கொண்டிருக்கிறோம்; எனவே இந்தத் துறையில் அலுவலர்களை மேலும் விரிவுபடுத்தும்பொருட்டு பயிற்சி பெற்ற ஊழியர்களின் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

துவக்க நடவடிக்கையாக மத்திய அரசு ஏழு நவீன அரிசி ஆலைகளை அமைத்தது; இவற்றுள் ஆறு கூட்டுறவுத் துறையிலும், ஒன்று அரசாங்கத் துறையிலும் இயங்கி வருகின்றன.

இங்காட்டில் ஏராளமான நவீன அரிசி ஆலைகளை அமைப்பது என்று மத்திய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்தப் புதிய தொழில் நுட்பத்துறையில் பயிற்சி பெற்ற எஞ்சினீயர்கள் தேவைப்படுகிறார்கள்.

நெல் அறுவடையானதற்குப் பிறகு அதிலிருந்து அரிசி எடுப்பது வரை எத்தனையோ அலுவல்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது; முதலில் நெல்லை சேமித்து வைக்க வேண்டும் --- ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் --- உலர்த்த வேண்டும்; இப்படி எத்தனையோ அலுவல்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

தஞ்சாவூரில் உள்ள 'இருபோக' நெல்லைப் பக்குவப்படுத்தும் பொருட்டு இந்திய உணவுக் கழகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் உலர்த்துவதற்கான இயந்திரவசதிகளைக் கொண்ட 30 நிலையங்களை அமைத்திருக்கிறது. நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ளவர்களும் இப்போது இதில் அக்கறைகாட்டி வருவதால் எஞ்சிய பகுதிகளிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதென்று உணவுக் கழகம் உத்தேசித்திருக்கிறது; இவற்றுக்கும் பயிற்சி பெற்ற எஞ்சினீயர்கள் தேவைப்படுகிறார்கள்.

மத்தியஉணவு-விவசாயத் துறை —போர்டு பவுண்டேஷன் நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கரச்பூரிலுள்ள இந்தியத் தொழில் நுட்பக் கழகம் அரிசியைப் பக்குவப்படுத்தும் நுட்பத்துறையில் குறுகியகாலப் பயிற்சிக்கு வசதி செய்துகொடுக்கிறது.

பயிற்சிக் காலம் 90 நாட்களாகும். 1968—69-ல் இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். கலம்பர் முதல் தேதி துவக்கிய முதலாவது பயிற்சி வகுப்பு சனவரி மாதத்தில் முடிவுறும். அடுத்த பயிற்சி வகுப்பு பிப்ரவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரை நடைபெறும். ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் அதிகபட்சம் 30 எஞ்சினீயர்கள் பயிற்சி பெறுவார்கள்.

நெல் சாகுபடித் துறையில் பயிற்சி உத்திகளைக் கையாளும் பொருட்டுத் தனி 'குழுநிலைக் கட்டுப்பாடு' அறைகளை வைத்துக் கொண்டு பரிசோதனை செய்கிறார்கள். இந்தத் தனி அறைகளில் ஒளி —ஈர அம்சம் --- அதிகபட்சக் குறைந்தபட்சம் வெப்பம் போன்றவற்றை ஆராய்ச்சிக்காக நிர்ணயித்தாள் அளவுக்குக் கொண்டு வரலாம். கரச்பூர் தொழில் நுட்பக் கழகத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பிரிவில் இப்போது இந்தப் பரிசோதனை முறையைக் கையாண்டு வருகிறார்கள்.

விவசாயிகட்கு தகவல் அறிவிக்கும் இயந்திரம்

இலண்டன், நவ. 18— விவசாயிகளுக்கு வானிலை அறிவிப்புகள் செய்யவும், மற்றும் பயிர் வகைகள், நிலவியல் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளவும் 'கம்ப்யூட்டர்' பயன்படப்போகிறது.

இதுவரையில் தானிய விலைகளைக் குறித்து வைக்கவும், ஊழியர்கள் சம்பளக் கணக்குபோன்ற வற்றிற்கும் மட்டுமே 'கம்ப்யூட்டர்' பயன்பட்டு வந்தது; இனி நிர்வாக முறையுடன், உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையான விவரங்களைத் தரவும் இந்த இயந்திரங்கள் பயன்படப்போகின்றன.

தமிழகத்தில் பஞ்சாபி சங்கத்தின் நற்பணி

இரா. நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, நவ. 18— சென்னை மருத்துவத் துறையிலும், கல்வித் துறையிலும் நீண்டகாலமாகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்ற பஞ்சாபியர் சங்கத்தை, கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் பாராட்டினார்.

சென்னை நகரில் உள்ள பஞ்சாபிய சமூகத்தவர்கள் ஒரு சங்கம் அமைத்து மருந்தகம், பள்ளிக்கூடம் ஆகியவற்றை நடத்திவருகிறார்கள். 'லஜ்பத்ராய் பவன்' என்று பெயரிடப் பெற்ற அவர்களது சங்கக் கட்டிடத்தில் இந்துப் பள்ளியும், மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன.

பஞ்சாபியர் சங்கத்தினரின் 'ஆதர்ச வித்தியாலயம்' உயர்நிலைப் பள்ளியில் நேருவின் பிறந்த நாளையொட்டி 'மழலைகளின் நாள்' கொண்டாடப் பட்டது; கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், விழாவுக்குத் தலைமைதாங்கினார்.

"நகரில் நீண்டகாலமாகச் செயலாற்றி வரும் பஞ்சாபியர் சங்கம் சிறிதளவு வேறுபாட்டுக்கும் இடமின்றி இங்குப் பகுதி மக்களோடு ஒன்றிவிட்டது. மருந்தகமும், பள்ளிக்கூடமும் நடத்தி தன் வசப்பிளாக்கு மட்டுமன்றி அனைவருக்கும் மருத்துவத்துறையிலும், கல்வித் துறையிலும் பஞ்சாபியர் சங்கம் தொண்டு புரிந்துவருவது பாராட்டுக்குரியது"

என்று அமைச்சர் நெடுஞ் செழியன் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

குழந்தைகள் விழாவுக்கான பரிசுகளை, அமைச்சர், மாணவர் -- மாணவிகளுக்கு வழங்கினார். பள்ளிக் குழந்தைகள் தாங்களாகவே அமைத்த கண்காட்சியையும் அவர் திறந்து வைத்தார்.

விழாத் துவக்கத்தில் பஞ்சாபியர் சங்கப் பொருட் செயலாளர் திரு. தாவன் வரவேற்பு நிகழ்த்தினார்.

குழந்தைகள் விழாவின் சிறப்புகள் குறித்து இந்து தியோஸாஃபிகல் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பாலகிருஷ்ண ஜோஷி, ஆதர்ச வித்தியாலய மாணவியர் தலைவி வத்சலா ஆகியோர் பேசினார்.

வித்தியாலய முதல்வர் திருமதி வசந்தலட்சுமி நன்றி கூறினார்.

தொடர்ந்து பள்ளிக் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உடற்கட்டினைக் கரைக்கும் புதிய கருவி!

இலண்டன், நவ. 18— உடலில் உண்டாகும் கட்டிகள்-அலவு எவ்வளவு நாள்பட்டதாக இருப்பினும்--எவ்வளவு ஆழந்தாக இருப்பினும்-இங்கு, சிகிச்சைக்காக புதிய கருவி ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கருவியிலிருந்து வெளிப்படும் வெப்பக் கதிர்கள், கட்டியைக் கரைக்கின்றன. மருந்தகப் பயன்பாட்டிற்காக மிகச் சக்திவாய்ந்த கருவி இதுதான் என்று கூறப்படுகிறது.

தற்போதும் இங்நோய் சிகிச்சைக்காக வெப்பக்கதிர் பாய்ச்சும் கருவி பழக்கத்தில் இருந்தாலும், இக்கருவியைத் தொடர்ந்து சில சேகண்டுகள் -- நிமிடங்களவரை யில்தான் பயன்படுத்த முடியும் ஒலிக் கிரனங்கள் அங்கக் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் உடலை ஊடுருவிச் செல்ல இயலாது. இந்த ஊடுகதிர்தின் அதிகப்பட்ட சக்தி அவ்வளவுதான்.

ஆனால், புதிய கண்டுபிடிப்பான இந்தக் கருவி, 'எலக்ட்ரான'களினால் இயங்கக்கூடியது; எனவே, இதிலிருந்து வெளியாகும் வெப்பக் கதிர்கள் தொடர்ந்து அதிக நேரம் உடலை ஊடுருவிச் செல்லு-நோய்க்கான கிருமிகளைத் தாக்கி--கட்டியைக் கரையச் செய்கிறது.

ஊராட்சி அலுவலகங்களில் நேருவின் பொன்மொழி

தமிழக அரசு உத்தரவு

வேலூர், நவ. 18— ஊராட்சி அலுவலகங்களில் நேருவின் பொன்மொழியை எழுதுமாறு தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு இது பற்றித் தமிழக அரசு அனுப்பியுள்ள உத்தரவில் கூறப்பட்டிருப்பதாவது:—

"ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், தங்கள் நிர்வாகத்திலுள்ள ஊராட்சிகளுக்கு, நேரு வின் பொன்மொழிகளை எழுதுமாறு யோசனை கூறவேண்டும்.

"ஒவ்வொரு ஊராட்சியிலும் சலவைக் கற்கள், உலோகத் தகடுகள், கரங்கிரீட் பலகைகள் ஆகியவற்றில், நேருவின் பொன்மொழிகளைத் தமிழில் பொறித்து வைக்கலாம்; இதற்காக ஒவ்வொரு ஊராட்சியும் ரூ. 100 வரை செலவிடலாம்."

வானிலை அறிவிக்கும் செயற்கைக் கோள்

புதிய அமெரிக்க வானிலை செயற்கைக் கோள் ஒன்று உலக வானிய மேக மூடாக்குகளைப் படம் எடுத்து பூமிக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. வானிலையை முன்கூட்டித் தெரிவிக்கவும், புயல் வீசுவது பற்றி முன்கூட்டியே எச்சரிக்கை விடுப்பதற்கும் இது உதவும்.

887 மைல் உயரத்தில் வட துருவ -- தென் துருவங்களைச் சுற்றி வட்ட வடிவமான வின் வெளிப் பாதையில் 'எஸ்ஸா-7' கோள் உலகம் முழுவதிலும் வானிலையைக் கண்காணித்து வருகிறது. 24 மணிக்கு ஒரு தடவை--ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட ஒரு இடத்தை--குறிப்பிட்ட அதே உள்ளூர் நேரப்படி படம் பிடித்து வருகிறது.

தொப்பிப் பெட்டி வடிவில் இருக்கும் இந்தச் செயற்கைக் கோளின் எடை 320 இராத்தல். பூமியை ஒரு தடவைச் சுற்றிவர 113 நிமிடம் ஆகிறது.

இதன் முக்கிய பணி, புயல்களைக் கண்டுபிடித்து அவற்றின் திசை கன்யம் தெரிந்துகொள்வதாகும்.

செயற்கைக் கோளில் டெலிவிஷன் காமிராக்கள் இருக்கின்றன; இவை பிரக்கும் படங்கள் காந்த நாடாக்களில் பதிவு செய்யப்படுகின்றன. பின்னர் இந்தப் படங்கள் பூமிக்கு அஞ்சல் செய்யப்படுட -- வானிலைக் குறிக்கும் வரைபடத்தில் அவை சேர்க்கப்படுட -- உலகக் முழுவதற்கும் ரேடியோ போட்டோ வழியாக வழங்கப்படுகின்றன.

செயற்கைக்கோள் புகைப் படங்களை ஆதாரமாக வைத்து, ஆபத்தான புயல்களால் அபாயம் இருக்கு நாடுகளுக்கு 3,000 எச்சரிக்கைகள் விடுக்கப்படுக்கின்றன.

கல்வியமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவ. 19: காலை 10 மணி: கோமாரபாளையம்—பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளல்; மாலை 4 மணி: தோட்டம்பட்டி—பள்ளிக் கட்டடத் திறப்பு விழா; 5 மணி: உப்பாரபட்டி—பள்ளிக் கட்டடத் திறப்பு விழா; மாலை 6 மணி: மேச்சேரி—பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளல்; இரவு 8 மணி: மேச்சேரி—பொதுக் கூட்டம்.

நவ. 20: காலை 10 மணி: சேலம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேரவையில் சொற்பொழிவு; மாலை 3 மணி: ஆர். புதுபாளையம்—பள்ளிக் கட்டடத் திறப்பு விழா; மாலை 4 மணி: இராசிபுரம்—அரசினர் கல்லூரித் துவக்கம்; 6 மணி: நாமக்கல்—அரசினர் கல்லூரித் துவக்கம்.

சென்னையில் அக்டோபர் புரட்சியின் 51-வது ஆண்டு விழா

சோவியத் மக்களின் சிறப்பியல்பு பற்றி விளக்கம்

சென்னை, நவ. 16— சென்னை 'இஸ்கஸ்' சார்பில், அக்டோபர் புரட்சியின் 51-ஆம் ஆண்டு விழாவையும், நேருவின் பிறந்த நாளையும் கொண்டாடும் வகையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கானோர் வருகை தந்திருந்தனர்.

இந்திய—சோவியத் கலாசாரக் கழகத் தமிழகக் கிளையின் துணைத் தலைவரும், முன்னணி வழக்கறிஞருமான திரு. என். டி. வானமாமலை கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

சென்ற ஆண்டு சோவியத் யூனியன் சென்று திருப்திய சென்னை மாநகராட்சிமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. சா. கணேசன் பேசுகையில், சென்னை--வோல்கா கிராடு இரட்டை நகர உடன்பாடு குறித்து விளக்கினார்.

"சோவியத் மக்கள் தோற்றத்தில் எளிமையானவர்கள்--ஆனால் கடுமையான உழைப்பாளிகள்; எதிர்காலத்தைப் பற்றி அவர்களுக்கு அச்சமே கிடையாது. சோவியத் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது -- சுரண்டலும் கிடையாது. அங்கு மனிதமனங்கள், லெனினது மகத்தான கோட்பாடுகளினாலும், போதனைகளினாலும், சோஷையும், நற்பண்பும் கொண்டதாகச் செம்மைப் படுத்தப்பட்டிருக்கின்றன" என்றார் அவர்.

அடுத்து வழக்கறிஞர் திரு. தா. பாண்டியன் பேசுகையில், 'இந்திய -சோவியத் நட்புறவு வித்து வெகு காலத்திற்கு முன்பே இடப்பட்டதாகும்; இப்பொழுது அது பெரும் தருவாக வளர்ந்து, கூட்டு நிர்மானத் திட்டங்கள் மூலம் இந்தியா முழுவதும் கிளைவிட்டுப் படர்ந்து நிற்கிறது. பொருளாதார உதவிக்காக மட்டுமே நாம் நண்பர்களல்லர் --- உலகெங்கணும் அமைதி ஓங்க- வேண்டுமென்று நம்மிற மக்களும் விரும்புகின்றனர்; எனவேதான், நமது நட்புறவு இவ்வளவு வலிவாகவும் உறுதியாகவும் உள்ளது. இந்திய - சோவியத் நட்புறவு தமது வாழ்வின் இன்றியமையாத அம்சம் என்பதை அவர்கள் தமது சேரிடை அனுபவத்தின் வாயிலாக உணர்ந்துள்ளனர்" என்று கூறினார்.

சோவியத் யூனியனைப் பற்றியும், சோவியத் மக்களைப் பற்றியும், நேரு மிகுந்த நேசத்தோடு -- எவ்வாறு பேசினார் என்பதையும், சோவியத் யூனியனை நம்பிக்கை யின் தூதன் என்று அவர் அழைத்தார் என்பதையும், சென்னையில் உள்ள சோவியத் காள்ச்கவேரின் கிளையுடுத்தினர்; 'சோவியத் - இந்திய ஒத்துழைப்பும், நட்புறவும் சோவியத் யூனியன் -- இந்தியா ஆகிய இரு நாடுகளின் நலன்களோடு மட்டுமன்றி உலக சமாதானத்தின் நலன்களோடும் இணைந்தவையாகும்' என்றார் திரு. கேவேரின்.

துருக்மினிஸ்தானுக்குச் சென்ற தமிழகக் கலாசாரக் குழுவின் உறுப்பினரும், மன்னார்குடி நகராட்சி மன்ற உறுப்பினருமான திரு. அம்பிராபதி பேசுகையில், 'சோவியத் நாட்டுக்குச் சென்று வந்த பிறகு, அங்கு உள்ளதைப் போன்ற அமுத வாழ்க்கையை நிர்மானிப்பதற்கு நாம் எத்தனித்தியாகங்கள் செய்தாலும் தகும் என்ற உறுதியான முடிவுக்கு வந்துள்ளேன்' என்று கூறினார்.

திரைப்பட இசையமைப்பாளர் திரு. எம். எஸ். விசுவநாதன் தமது சோவியத் அனுபவங்களைக் கூறி, துருக்மினிஸ்தான் பற்றிய ஒரு தமிழ்ப் பாடலைப் பாடினார்.

முகவரி மாற்றம்:

ஏ. துரைக்கண்ணன்
செயலாளர், தி.மு.க.,
'ராணி' அச்சகம்,
86, அனந்தப்பா நாடார் தெரு,
சிவகாசி.

நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கை ஏமாற்றத்தைத்தான் அளிக்கிறது!

மாநில அரசுகளின் தேவையை உணர்ந்ததாகத் தெரியவில்லை

நிதிவசதிக்கு டெல்லியை எதிர்பார்ப்பது தவிர்க்க இயலாதது

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் அண்ணா கருத்து விளக்கம்

சென்னை, நவ. 17—

"நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கை--தமிழக அரசைப் பொறுத்தவரையில் -- மனநிறைவு தருவதாக இல்லை! மொத்தத்தில், ஏமாற்றத்தையே அளித்திருக்கிறது! மாநில அரசின் தேவையை உணராத அளவில் இருக்கிறது!

"இது இடைக்கால அறிக்கைதான் என்பதால், இறுதி அறிக்கையிலாவது நிதிக் குழு, தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலனை செய்து நியாயம் வழங்கும் என நம்புகிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் விளக்கிக் கூறி நம்பிக்கை தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மாநிலங்கள் வாங்கும் அதிகப் பற்றுக் குறித்து இங்கு அறிக்கையில் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது; இந்த அதிகப் பற்றைப் பொறுத்தவரையில், தமிழகத்தின் கடந்த கால நிதிக் கணக்கை எடுத்துப் பார்த்தால், இது, 'கடன்காரன் -- லேவா தேவிக்காரன்' என்ற கண்ணோட்டத்தில் தான் அமைந்திருக்கிறது.

மாநில அரசின் அதிகப் பற்றை, 'கடன்காரன் -- லேவா தேவிக்காரன்' கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடாது; நிதிக் குழுவின் சிபாரிசுகளும் அந்தக் கண்ணோட்டத்திலேயே இருப்பது வருந்தத்தக்கது.

சிரசர் பாங்கி அனுப்பும் சுற்றறிக்கைபோல் நிதிக் குழுவின் சிபாரிசு உள்ளது. தமிழக அரசைப் பொறுத்தவரையில், தற்காலிக ஏற்பாடாகத்தான் அதிகப் பற்று வாங்குகிறது; நிதி வசதி இருந்தால், அதிகப் பற்று ஏன் வாங்கப்போகிறோம்?

வருவாய்க்கும் -- நிறைவேற்றித் தீரவேண்டிய பொறுப்புகளுக்கும் இடையில் உள்ள நிலைமைகளைப் பொறுத்துத்தான் அதிகப் பற்று வாங்கப்படுகிறது; நாளுக்கு நாள், நிறைவேற்றித் தீர வேண்டிய பொறுப்புகள் அதிகரிக்கும் அளவிற்கு வருவாய் இல்லை.

இதை நன்கு ஆராய்ந்து பார்த்தால் மத்திய அரசு தனது செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத காரணத்தால், மாநில அரசுகளுக்குப் போதிய நிதி உதவிகளைச் செய்ய முடியாமல், முடிவில் மாநில அரசுகள் அதிகப் பற்று வாங்கித் தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதை நிதிக் குழு நீவிரமாக ஆராயும்படி கேட்டுக் கொள்கிறேன். வாங்கிய கடன் சுமை, கொடுக்க வேண்டிய கடன்களைத் திருப்தித் தரும் வகைகளை மாற்றியமைக்க வேண்டும். இந்த அதிகப் பற்று வாங்குவதற்கு முடிவு கட்ட இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

"தன்னுடைய நிதி வசதி இடையூறுகளைத் தவிர்த்துக்கொள்ள மாநில அரசுக்கு மத்திய அரசு உதவுகையில், செலவுகளைத் திறம்பட கட்டுப்படுத்துவதை உறுதி செய்வதில் மாநில நிதித் துறையுடன் தொடர்புகொள்ள ஒர் அதிகாரியை மத்திய அரசு அனுப்பலாம்" என்று நிதிக் குழு செய்துள்ள சிபாரிசை, தன் மானமுள்ள எந்த அரசும் ஏற்றுக்கொள்ளாது.

மாநிலங்களைப் பொறுத்தவரையில், நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ள வரி விதிப்பு--மத்திய அரசு உதவி--ஆகியவைகளின் மூலம்தான் இயலும்.

வரி விதிப்பு என்பது இனி இயலாதது என்பது மத்திய அரசுக்குத் தெரியும்; எனவே, மாநில அரசுகள், நிதி வசதிக்கு மத்திய அரசை எதிர்பார்ப்பது என்பது, தவிர்க்க இயலாததாகும்.

அடிப்படைக் காரணங்களை ஆராய்து அவற்றை அகற்றாது வரையில், நிதி பற்றிய பிரச்சினை நீடிக்கவே செய்யும்; தொடர்ந்து, மத்திய—மாநில உறவு முறையைப் பாதித்து வரவேசெய்யும்."

அமைச்சரவையை விரிவுபடுத்தும் எண்ணமில்லை

"அமைச்சரவையை விரிவாக்குவது பற்றியோ, அமைச்சர்களின் துறைகளில் மாற்றம் செய்வது பற்றியோ இப்போதைக்கு எதுவும் செய்வதற்கில்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

இதுபற்றிச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அண்ணா அவர்கள் அளித்த விடைகளும் வருமாறு :—

கேள்வி :—"அமைச்சரவையில் தொழிலாளர் நல அமைச்சர் மாதவனைக் குறித்து கடந்த சில நாட்களாகப் பரவலாக வதந்தி உலவிவருகிறதே ?"

அண்ணா :—"நான் கேள்விப்படவில்லை; என்ன அது ?"

கேள்வி :—"கருத்து வேறுபாடு காரணமாக அமைச்சரவையில் இருந்து மாதவன் விலக விரும்பும் தெரிவித்து இராஜிநாமாச் செய்துவிட்டதாகக் கூறப்படுவது உண்மையா ?"

அண்ணா (சிரித்துக்கொண்டே):—இந்தமாதிரி கேள்விக்கே இடம் இல்லை; அமைச்சரவையை விரிவாக்குவதும் இல்லை; அமைச்சர் யாரும் இராஜிநாமாச் செய்வும் இல்லை."

கேள்வி :—"அமைச்சர்களின் துறைகளை மாற்றியமைப்பது பற்றி நீங்கள் யோசித்துவருவது உண்மையா ?"

அண்ணா :—"இப்போதைக்கு இல்லை."

கேள்வி :—"இரண்டு மாத காலம் தாங்கள் சிகிச்சைக்காக அமெரிக்காவில் இருந்தபோது, இங்கே அமைச்சர்கள் எவ்விதக் குறைபாடும் இல்லாமல் திறமையாகத்தானே நிர்வாகம் நடத்திஞர்கள்? இந்நிலையில், அமைச்சரவையை விரிவாக்குவதற்கு அவசியம் ஏதேனும் இருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? விரிவுபடுத்துவது தேவைதானு ?"

அண்ணா :—"அமைச்சரவையை விரிவுபடுத்துவது தேவையென்றும், தேவையில்லை என்றும் சொல்வதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன; அவற்றில் இதுவும் ஒன்று.

ஒரே அமைச்சரிடம் பலதுறைகள் குவிந்துகிடந்தால் முழுமையாகக் கவனம் செலுத்திச் செம்மையாக நிர்வாகம் நடத்த முடியாது. ஆகவே, ஒர் அமைச்சரிடம் ஒரிரு துறைகள் மட்டுமே இருந்தால் திறமையாகச் செயலாற்ற முடியும்; அதற்காக அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பது ஒரு காரணம். அத்தோடு, நிர்வாகத் துறையில் இளைஞர்களுக்கும், புதியவர்களுக்கும் அனுபவம் ஏற்படுத்த இது உதவும் என்பது மற்றொரு காரணம்.

எண்ணப் பொறுத்தவரையில், நான் இப்போதைக்கு அம்மாதிரி யோசிக்கவில்லை. அமைச்சரவையை விரிவாக்குவது-அமைச்சர் இராஜிஞமா ஆகிய பிரச்சினைகளுக்கோ அல்லது இலாகா மாற்றம் குறித்தோ என சிந்தனை செல்லவில்லை."

இரு நாட்களே ஓய்வு

கேள்வி :—"மூன்று மாத காலத்திற்கு உங்களுக்கு முழு ஓய்வு தேவையென்று டாக்டர் மிலர் கூறியபோதேன்பட, கருநாடக மாநிலத்தில் உள்ள நந்திமலையில் ஓய்வு எடுக்கப்போவதாகச் செய்தி வந்ததே—அங்குபோகப் போகிறீர்களா ? எப்போது ? எவ்வளவு நாட்களுக்கு ?"

அண்ணா :—"ஓய்வுக்காக வெளிமாநிலத்திற்கோ, சென்னைக்கு வெளியேயுள்ள இடத்திற்கோ போவதற்குப் பதிலாக சென்னை நகரிலேயே வாரத்திற்கு இரண்டு நாள், எல்லா அலுவல்களிலிருந்தும் முழுமையான ஓய்வு பெறலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்; ஆகவே, வாரத்திற்கு இரண்டு நாட்கள் ஓய்வெடுக்கவிருக்கிறேன்."

கேள்வி :—"அது எந்தெந்த நாட்கள் ?"

அண்ணா :—"வாரக் கடைசியின் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள்."

மாலிகை வாசம் தேவையில்லை!

கேள்வி: 'அடையாற்றில் உள்ள புதிய பங்களாவிற்கு எப்போது குடிபோகப் போகிறீர்கள் ?"

அண்ணா: "அடையாற்றிலுள்ள புதிய பங்களாவுக்குக் குடிபோவது அவசியமா என்பதை மறு பரிசீலனை செய்துவருகிறேன்; ஆறு மாதங்களுக்கு முன்பு அரசாங்கத் தலைமைச் செயலாளர் என்னைச் சந்தித்த போது, சென்னையில் உள்ள அரசாங்க விருந்தினர் மாளிகையில் இடம் பற்றுக்குறை உள்ளது; வெளி மாநிலங்களிலிருந்தோ அல்லது வெளி இடங்களிலிருந்தோ விருந்தாளிகளாக வரக்கூடிய முக்கியப் பிரமுகர்களைச் சென்னையில் உள்ள ஓட்டல்களில் தங்கவைக்க வேண்டியிருப்பதால், தமிழக அரசாங்கமே விருந்தினர்களுக்காக இன்னொரு மாளிகையைக் கட்டவேண்டும்' என்று அவர் என்னிடம் யோசனை கூறினார்; அந்த யோசனையின் அடிப்படையில், அங்கேமாக நான் குடிபோகவிருந்த அடையாறு பங்களா, அரசாங்க விருந்தினர் மாளிகையாக மாற்றப்படும்; இதுகுறித்து, பொதுப் பணித் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும்; ஆகவே, அந்தப் பங்களாவுக்கு நான் குடிபோக வேண்டுமா -- வாரத்திற்கு இரண்டு நாள் முழுமையான ஓய்வு எடுப்பதால் இந்த வீட்டிலேயே இருந்து விட்டாலென்ன--என்பது பற்றி மறு பரிசீலனை செய்கிறேன்."

பரிசுச் சீட்டு

தமிழக அரசின் பரிசுச் சீட்டுகள் மூலம் நடப்பு நிதியாண்டுக்குள் ரூ. 3 கோடி முதல் ரூ. 4 கோடி வரை அரசுக்குக் கிடைக்கலாம் என்று எதிர்பார்ப்பதாக முதலமைச்சர் அண்ணா கூறினார்.

நாகர்கோயில் இடைத் தேர்தல்

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் சுதந்தராக் கட்சி வேட்பாளரே போட்டியிட வேண்டும் என்று தாம் விரும்புவதாக அண்ணா தெரிவித்தார்.

பெருந்துறைத் தொகுதியில்

சட்டமன்றத்திற்கான பெருந்துறைத் தொகுதி இடைத் தேர்தலில் யார் போட்டியிடுவது என்பது பற்றி அண்ணா கருத்தறிவிக்கையில், 'அங்கே போட்டியிட்ட தங்களுக்கே பலமிருப்பதாக சோஷலிஸ்டுக் கட்சியின் கருதினால், அவர்களே போட்டியிட அனுமதிப்போம்; இல்லையென்றால், வேறு வழி பற்றி ஆலோசிப்போம்' என்றார்.

தஞ்சைத் தகராறு

தஞ்சை மாவட்டத்தில் நிலவுமைமயாளர்—உழவுத் தொழிலாளர் தகராறு பற்றிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து விரிவான அறிக்கை சேட்டிருப்பதாக அண்ணா தெரிவித்தார்.

சட்டமன்றக் கூட்டம்

சட்டமன்றத்தைக் கூட்டி விவாதிக்க வேண்டிய முக்கிய மசோதாக்கள் எதுவுமில்லை என்றும், அடுத்த இரண்டு மாத காலத்துக்கு சட்டமன்றக் கூட்டம் இராது என்றும் அண்ணா சொன்னார்.

அரசு ஊழியர் மருத்துவப் படி

"தமிழக அரசு ஊழியர்கட்கு மருத்துவப் படி அளிப்பதுபற்றி அரசு முடிவு செய்திருப்பதாக வெளியான செய்தி தவறு" என்று மறுத்தார் அண்ணா.

"மருத்துவச் செலவுக்கான பட்டியலை (பில்) கொடுத்து அரசிடமிருந்து பணம் பெறுவதற்குப் பதிலாக, 'மாதம் இவ்வளவு என்று மருத்துவப் படி அளிக்கலாம்' என்ற ஒரு யோசனை இருந்துவருகிறது; அதுபற்றி இன்னும் ஆராயவில்லை; இந்த யோசனை ஊழியர்கட்கு ச்சாதகமாக இருக்கும் என்று நான் கருதவில்லை" என்று மேலும் விளக்கமளித்தார்.

இந்திக்கு வடக்கேயும் எதிர்ப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தை அவர் 'ராஜ பாஷா' இந்தியில் நிர்ப்பந்தி அனுப்பியிருக்கிறார். ஒரிசா அரசு அவருக்கே பணத்தைத் திருப்பியனுப்பியதோடு நில்லாமல் ஒரு கடிதமும் எழுதியிருக்கிறது.

'மணியார்டரோ, கூடிதப்போக்கு வரதோ ஆங்கிலத்திலுதான் இருக்க வேண்டும்; இந்தியில் எழுதப்படும் கடிதங்களைப் படிக்காமலேயே குப்பைக் கூடையில் எறியப்படும்' என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தகவல் 'நவபாரத் டைம்ஸ்' இதழில் வெளியாகியுள்ளது.

தமிழக மின்சார வாரியம்

கோதையாறு நீர் மின் திட்டம் K 2-காண்டிராக்ட்

குறிப்பு எண் : K. C. 152

தமிழக மின்சார வாரியம்—கோதையாறு நீர் மின் திட்டம்—Penstock I Concreting the superstructure for Anchor I-A of Penstock I.

ஸ்பெசிபிகேஷன் No. K.C. 152

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின்படி அதனுடைய முகவுரையில் எழுதப்பட்டு முத்திரையிட்ட டெண்டர்கள் கீழே கையொப்பமிடப்துள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 13—12—68 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன்னால் திறக்கப்படும்.

டெண்டர் செட்டுகளின் நகல்களை (மாறாத்தக்கதல்ல) ஒவ்வொரு செட்டிற்கும் மேலே குறிப்பிட்டுள்ளபடி ரூ. 5-15 (ரூபாய் ஐந்து மற்றும் பைசா பதினாறு மட்டும்) (விற்பனை வரி உட்பட) செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எந்தச் சந்தாப்பத்திலும் திருப்பித் தரமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்ான பிணத்தொகை ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் முன்னதாகச் செலுத்தி அத்தகான செலுத்துச் சீட்டை டெண்டர் நகலுடன் இணைக்கப்படவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் செக்குகள் (Cheques) ஏற்கப்படமாட்டார.

வாரியத்தினாரல்குறிப்பிட்டுள்ள மறு பாரத்தில் இல்லாத டெண்டர்கள் அல்லது இறுதித் தேதி நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். கீழே ஒப்பமிட்டுள்ளவருக்கு வேலைகளை, சில அல்லது எல்லா டெண்டர்தாரகளுக்கும் பகிர்ந்து வழங்வும் அல்லது சில அல்லது எல்லா டெண்டர்களையும் ஏற்றுக்கொள்ளவோ, காரணம் சொல்லாமல் மறுக்கவோ உரிமையுண்டு.

தபால் போக்குவரத்தில் ஏற்படும் தாமதத்திற்கும் காணுமல் போகும் எந்த டெண்டர் செட்டுக்கும் மின்சார வாரியம் பொறுப்பாளியாகாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
மேற்குகரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

கோதையாறு
மேற்குகரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலப்பு மணத் தம்பதிகளைப் பாராட்டி அமைச்சர் பேசுகையில், 'நாட்டில் சாதி வேற்றுமைகள் மறையும் என நம்பிக்கை தெரிவித்தார்; 'காங்கி நூற்றாண்டு விழா விண்போது பெரும் அளவில் கலப்புத் திருமணங்கள் நடைபெறும்' என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

தரப்பாக்கம்

பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தரப்பாக்கம் துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா, 18—11—68 மாலை 5-மணிக்கு நடைபெறும்; சுகாதாரத் துறை அமைச்சர் திரு. எஸ். தே. சாதிக் பாட்சா திறந்துவைப்பார்; எம். வி. சோலையப்பன் தலைமை வகிப்பார்; எம். கோபால் எம். எல். ஏ, ஜு. ஏ. பெயர்பெற்ற, மீனாட்சி நடராசன், ஆர். எம். பி. பண்டரசன் ஆகியோர் பேசுவர்.

நிராவிட முன்னேற்றக் கழகத்திற்காக நடு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடு வோராகவும், சம்பிரதாயமும் கொண்டு அழகிய அச்சுக்தலை (34, குமிரநாராயண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.